வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 23.07.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

- எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 26ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, ஆகாஷ்வாணியின் மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.
- பசுமை ஹைட்ரஜன் துறையில், உலகின் முன்னணி நாடாக மேம்பட பொருத்தமான நிலையில், இந்தியா இருப்பதாக, மத்திய இணை அமைச்சர் திரு. ஸ்ரீபத் யெசோ நாயக் கூறியுள்ளார்.
- தன்னார்வ உடல் தானம் குறித்து, காரைக்கால் ஜிப்மர், இன்று கோட்டுச்சேரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது.

***<u>நாடாளுமன்றம்-1 (13)</u>***

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் குறித்து, இன்று நாடாளுமன்றத்தில் எதிர் கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவை முதலில் இரு முறையும், பிற்பகல் 2 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மாநிலங்களவையிலும், அலுவல்கள் முதலில் 3 முறை ஒத்தி வைக்கப்பட்டு, பிற்பகல் 3 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. நீட் விவகாரம் குறித்து விவாதங்களை தவிர்க்கவே எதிர்கட்சிகள் முயலுவதாகவும், புதிய நிபந்தனைகளை அவர்கள்

விதிப்பதற்கு இதுவே காரணம் என்றும், மக்களவையில் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறினார். நாடாளுமன்றத்தில் முறைப்படி விவாதிக்கத் தயார் என்பதை அரசு தெளிவு படுத்திய பின்னரும், காங்கிரஸ் மற்றும் இதர எதிர் கட்சிகள், அலுவல்களை தடைப் படுத்துவதாக, மாநிலங்களவையில் அவர் குற்றம் சாட்டினார்.

_மோடி – இளைஞர் (15)_

நாட்டில், இளைஞர்களின் நலன் மற்றும் எதிர்காலத்தைவிட முக்கியமானது வேறெதுவும் இல்லை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். தேர்வு வினாத்தாள் கசிந்து வெளியான பிரச்சனையில், சம்பந்தப்பட்டவர்கள் மீது, கடும் நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்படுவதை விரைந்து உறுதிப்படுத்தும் வகையில், விரைவு நீதிமன்றங்களை அரசு அமைக்கும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் அறிவித்துள்ளார். இது குறித்து தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாம் அறிவுறுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மாணவர் நலனை மேம்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இவ்வாறு முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும், இளைஞர்களின் எதிர்காலத்தை, பாழாக்க முயல்பவர்களை, அரசு சும்மாவிடாது என்றும் பிரதமர் கூறியுள்ளார். விரைவு நீதிமன்றங்களை அமைப்பதான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முடிவை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர் வரவேற்றுள்ளனர்.

_போலி வீடியோ (15)_

டெல்லி ஜன்தர் மந்தர் போராட்டத்தில், பெண் ஒருவர் உயிரிழந்த தாக கூறப்படுவதை, டெல்லி போலிஸ் மறுத்துள்ளது. சம்பந்தப்பட்ட பெண் உயிருடன் இருப்பதாகவும், அவர் தற்போது டெல்லி ராம் மனோகர் லோஹியா மருத்துவனையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும், சமூக

ஊடகப் பதிவில் டெல்லி போலிஸ் தெரிவித்துள்ளது. சரிபார்க்கப் படாத செய்திகளை பொதுமக்கள் நம்பவேண்டாம், மற்றும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்றும், அதிகாரப் பூர்வ தகவல் தொடர்பு ஊடகங்களை மட்டுமே நம்பலாம் என்று கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. இதற்கிடையே, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களை மிரட்டுவது போல், பாதுகாப்பு அமைச்சர் பேசியதாக காட்டும் வீடியோ போலியானது என்று, மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த வீடியோ, செயற்கை நுண்ணறிவு மூலம் தயாரிக்கப்பட்டது என்றும், இந்தியாவிற்கு எதிரான பாகிஸ்தானியப் பிரச்சார சக்திகளே, இந்த வீடியோவை பரப்பி வருவதாகவும், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு தெரிவித்துள்ளது.

***<u>எத்தனால் – கட்கரி (11)</u>***

எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டினால், மோட்டார் வாகனங்களின் எஞ்சின் பழுதான பிரச்சனை, அல்லது, வாகனம் நின்று போன பிரச்சனை, அதிகம் இல்லை என்று, மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்திய மோட்டார் வாகன உற்பத்தியாளர் சங்கத்திடம் இருந்து, பெறப்பட்டுள்ள தகவலில் இவ்வாறு தெரிய வந்திருப்பதாக, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி, இன்று, மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். போக்குவரத்து துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவினரின் ஆலோசனை அடிப்படையில், முறையான களப் பரிசோதனைகளுக்குப் பின்னரே, பெட்ரோலுடன் எத்தனால் கலந்து விற்கும் நடைமுறை கொண்டுவரப் பட்டதாக, அமைச்சர் கூறினார்.

*மனோகர் லால்-1 (3)*

நாட்டில் போதிய அளவு மின்சாரம் கிடைப்பதாக, மத்திய மின்சாரத் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார். இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் அவர் இவ்வாறு கூறினார்.

*மனோகர் லால்-2 (9)*

(வாய்ஸ்)

2014ஆம் ஆண்டிற்குப் பின்னர், நாட்டின் மின்சார உற்பத்தித் திறன், 324 கிகா வாட் அளவிற்கு உயர்த்தப் பட்டதால், இந்தியா மின் பற்றாக்குறை நாடு என்ற நிலையில் இருந்து, மின்சார துறையில் சுய சார்பு நாடாக மாறி இருப்பதாக, மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் கூறினார். இவ்வாண்டு ஜூன் மாத நிலவரப்படி, நாட்டின் மொத்த மின்சார உற்பத்தித் திறன், 548 கிகா வாட்டை விட அதிகம் என்று, அவர் தெரிவித்தார். 2014ஆம் ஆண்டில் இருந்து இதுவரை, நாட்டில் சுமார் 2 லட்சத்து 18 ஆயிரம் மின்சுற்றுக் கிலோ மீட்டர் அளவிற்கு, கூடுதல் மின்விநியோகப் பாதைகள் நிறுவப் பட்டுள்ளதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

*CSIR (11)*

அறிவியல் - தொழில் ஆராய்ச்சிகளுக்கான CSIR ஆய்வகங்களால் உருவாக்கப் பட்ட, 4 புதிய தொழில் நுட்பங்களை, CSIR நிர்வாகம், தொழில் நிறுவனங்களுக்கு வழங்கி உள்ளது. கிராமப்புற நீர் விநியோகத் திட்டங்களில், கண்காணிப்பு மற்றும் அளவீட்டுப் பணிகளை, திறம்பட்ட முறையில் மேற்கொள்ள ஏதுவாக, CSIR உருவாக்கி உள்ள IOT தொழில்நுட்ப வசதியும், வர்த்தக ரீதியிலான பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. புதுடெல்லியில் இன்று இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில், CSIR தலைமை இயக்குநர் டாக்டர் கலைச்செல்வி பேசுகையில், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட புதிய தொழில்

நுட்பங்களை, தொழில் துறையினர் மற்றும் சமுதாயத்தின் தேவைக்கேற்ற படைப்புகளாக மாற்ற, தாங்கள் முக்கியத்துவம் அளிப்பதாக கூறினார்.

*ன் கீ பாத் (7)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 26ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகாஷ்வாணியின், மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 136ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணிக்கு, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். AIR செய்தி இணையதளம், மற்றும் News- on-air மொபைல் செயலியிலும், இந்த ஒலிபரப்பை கேட்கலாம்.

*ஒலிபரப்பு தினம் (10)*

ஒலிபரப்புத் துறையில், வானொலி, மற்றும் தொலைக்காட்சியில் இருந்து, டிஜிட்டல் ஒலிபரப்பு வரை, பரிணாம வளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், பிரஸார் பாரதி, புதிய தொழில் நுட்பங்கள் மூலம், மக்களுக்குத் தேவையான செய்தி, கேளிக்கை, மற்றும் கல்வி நிகழ்ச்சிகளை தொடர்ந்து வழங்கும் என, பிரஸார் பாரதி தலைமைச் செயல் அதிகாரி திரு. கவுரவ் துவிவேதி தெரிவித்துள்ளார். இன்று தேசிய ஒலிபரப்பு தினத்தை ஒட்டி, ஆகாஷ்வாணி செய்திகளுக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார். WAVES என்னும், பிரஸார் பாரதியின் OTT தளத்தை தற்போது 1 கோடியே 10 லட்சம் பேர் பயன்படுத்தி வருவதாகவும், பயனர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*பசுமை ஹைட்ரஜன்-1 (6)*

பசுமை ஹைட்ரஜன் துறையில், உலகின் முன்னணி நாடாக மேம்பட பொருத்தமான நிலையில், இந்தியா இருப்பதாக, புதிய மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் துறைக்கான மத்திய இணை அமைச்சர் திரு. ஸ்ரீபத் யெசோ நாயக் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், 2ஆவது பாரத் கிரீன்

ஹைட்ஜன் உச்சி மாநாட்டில் வீடியோ செய்தி மூலம் ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு கூறினார்.

*பசுமை ஹைட்ரஜன்- 2 (15)*

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தினால், நாட்டின் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ற, வலுவான, தூய எரிசக்திச் சூழல் உருவாகி வருவதாக, அமைச்சர் திரு. யெசோ நாயக் கூறினார். புதிய எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறும் போக்கில், புதிய கட்டம் ஒன்றை உலக நாடுகள் எட்டி இருப்பதாகவும், பசுமை ஹைட்ரஜனுக்கு மாறுவதில் முன்னணி நாடு எது என்பதே இன்றைய முக்கிய கேள்வி என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவை பொருத்தவரை, பசுமை ஹைட்ரஜன் என்பது புதிய பொருளாதார வாய்ப்பே தவிர வெறும் எதிர்கால உத்தேசம் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில், பசுமை எரிசக்தி திறன்கள் வேகமாக அதிகரித்து வருவதையும், முற்றிலும் உள் நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயில், அண்மையில் செயல்படத் தொடங்கி இருப்பதையும், அமைச்சர் தமது உரையில் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் சூழலை மேலும் வலுப்படுத்தத் தேவையான முக்கிய தலையீடுகள் குறித்து, பாரத் கிரீன் ஹைட்ரஜன் மாநாட்டில், விரிவாக விவாதிக்கப் படுகிறது.

*புதுச்சேரி போராட்டம் (8)*

டெல்லி போராட்டத்திற்கு ஆதரவாக புதுச்சேரியில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் நோக்கத்துடன், இன்று, அஜந்தா சிக்னல் சந்திப்பில் இருந்து, ஊர்வலமாக புறப்பட்டு வந்த இந்திய மாணவர் சங்கத்தினர் மற்றும் மாணவிகளை போலிசார் பாதியிலேயே தடுத்து கைது செய்ததால் பரப்பரப்பு ஏற்பட்டது. நீட் தேர்வு குளறுபடிகளுக்கு காரணமான மத்திய கல்வியமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என கோரியும், இக்கோரிக்கையை வலியுறுத்தி டெல்லியில் போராட்டத்தில்

ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு ஆதரவாகவும், புதுச்சேரியில் இப்பேரணி நடத்தப்படுகிறது.

***காரைக்கால் உடல் தானம் (8)***

சுய விருப்ப அடிப்படையிலான உடல் தானம் குறித்து, காரைக்கால் கோட்டுச்சேரியில் உள்ள அண்ணா நகர் அங்கன்வாடி மையத்தில், காரைக்கால் ஜிப்மர் மருத்துவமனையின் உடற்கூறியல் துறையினர் இன்று விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். துறையின் பொறுப்பு அதிகாரி டாக்டர் சரண்யா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, உடல்தானம் செய்வதற்கான தகுதிகள், மற்றும், பதிவு உள்ளிட்ட சட்ட நடைமுறைகள் குறித்து, பொதுமக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப் பட்டது.

***ஜிப்மர் காரைக்கால் (6)***

புதுச்சேரி ஜிப்மரில் இருந்து நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் மூட்டுவலி சிகிச்சைக்கான சிறப்பு மருத்துவர் குழு வரும் சனிக்கிழமை காலை 10 மணி முதல், நண்பகல் 12 மணி வரை, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில், மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சை அளிக்க உள்ளனர். காரைக்கால் பகுதி மக்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென, மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

***வானிலை (12)***

தமிழக கடலோரப் பகுதிகளில், கீழ் மட்ட வளிமண்டலத்தில், பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், வானிலை ஆய்வு மையம்

தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், வரும் 29ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. வரும் 27ஆம் தேதி வரை தமிழ்நாடு, மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத் தகுந்த மாற்றங்களுக்கான வாய்ப்பு குறைவுதான் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*காமன்வெல்த் போட்டி (14)*

23ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் இன்று மாலை தொடங்குகின்றன. இந்த 10 நாள் போட்டிகளில், இந்தியா உட்பட 74 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்கின்றன.

இதற்கிடையே, கிளாஸ்கோ-வில் இன்று நடைபெற்ற, காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில், மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கலந்து கொண்டார். அனைவரையும் உள்ளடக்கிய, அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் வகையிலான, பாதுகாப்பான விளையாட்டுச் சூழல் ஒன்றை மக்களுக்கு வழங்க, இந்தியா உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2030ஆம் ஆண்டு, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை இந்தியா கோரிப் பெறும் என்று அமைச்சர் தெரிவித்தார். இப்போட்டிகளை நடத்த முற்றிலும் ஆயத்தமான நிலையில், அகமதாபாத் இருப்பதாக, அவர் மேலும் கூறினார்.

***<u>சீனா பேட்மிண்டன் (3)</u>***

சீன ஓபன் பேட்மிண்டன் சாம்பியன் பட்டப் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்திய வீராங்கனை பி.வி சிந்து, இன்று, Round of 16 போட்டியில், சீன வீராங்கனையிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.